Ti Ta Nb Zr Ss Ni Pt

**Ti Anode Fabricators Pvt. Ltd.**
An ISO 9001 : 2015 Company

Tiaano® Innovation In Inert Metals since '92

#48, Noothanchary, Madambakkam, Chennai - 126. Ph.: +91 44 2278 1148, +91 94445 69900 Fax: 2278 1362 Email: marketing@tiaano.com Web: www.tianode.com

**"கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"**

## GOAL 2017-2018

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 120% ↑
- **Products for ...**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers...**
  - Up to Aug.17 : 1051 Nos.
  - Up to Jul.17 : 1043 Nos.
- **Performance Aug. 17 ...**
  - Turnover growth : 12.40%
  - Employment growth : -6.53%
  - 100% Attendance : 6.29 %

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. V. P. Jeyakumar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil – Water Treatment Equipments.

HydroGen – HHO Generators

Titanictrade – Portal for Exotic Metals

Tiaano Vidyashram – Tiaano Vidyashram (CBSE Curriculum)




### வெற்றி வாழ்க்கை

ராஜாவுக்கு அன்று பிறந்தநாள்! பிரபுகள் ராஜாவின் மேல் பரிவுடையோர் என பலர் பரிசுகளை கொடுத்து ராஜாவை வாழ்த்திச் சென்றனர். அப்படி கொண்டு வரப்பட்ட பரிசுப் பொருட்களில் இரண்டு அழகான கழுகு குஞ்சுகளும் இருந்தன. அதைப் பார்த்த ராஜா அவை இரண்டையும் அரண்மனை தோட்டத்திற்கு கொண்டு வரச் சொன்னார். அரண்மனைத் தோட்டத்திற்கு கொண்டு வரப்பட்ட கழுகு குஞ்சுகள் இரண்டையும் ஒரு மரக்கிளையின் மேல் அமர வைத்தனர். அதில் ஒன்று கொஞ்ச தூரம் பறந்து விட்டு, பின் திரும்பவும் தன் இடத்திற்கே வந்து அமர்ந்து கொண்டது. ஆனால் அடுத்த கழுகு குஞ்சோ கொஞ்சம் கூட பறக்க முயற்சிக்கவில்லை. அதை முந்தின நாள் எங்கு விட்டுச் சென்றிருந்தார்களோ, அதே இடத்தில் தான் அடுத்த நாளும் அமர்ந்திருந்தது. நாட்கள் கடந்தன.... ஒவ்வொரு நாளும் ராஜா தோட்டத்தில் உலாவும் போது அந்த கழுகு குஞ்சு பறக்கிறதா என்று பார்ப்பார். ஆனால் அந்த கழுகு குஞ்சு அமர வைத்த இடத்திலேயே தான் இருந்தது. அரண்மனை வேலையாட்கள் அந்த கழுகு குஞ்சை பறக்க வைக்க எவ்வளவோ முயற்சி செய்தனர். ஆனால் எந்த முயற்சியும் பலனளிக்கவில்லை.

இதைக் கண்ட ராஜா கிராமத்தில் வசிக்கும் யாரையாவது உடனே அழைத்து வந்து அந்த நபரிடம் இந்த பொறுப்பை கொடுங்கள் என்றார். அது போலவே கிராமத்திலிருந்து ஒருவர் வரவழைக்கப்பட்டார். அடுத்த நாள் ராஜா தோட்டத்தில் உலாவும் படி சென்றபோது, அவருக்கு பயங்கர ஆச்சரியமாயிருந்தது. வழக்கமாய் அவர் தோட்டத்திற்குள் வரும் போது ஒரு கழுகு குஞ்சு தான் பறக்கும். ஆனால் அன்று இரண்டு கழுகு குஞ்சுகளுமே அழகாக பறந்து கொண்டிருந்தன. உடனே கிராமவாசியை அழைத்து "எப்படி பறக்காத கழுகு குஞ்சை பறக்க வைத்தாய்?" என்று கேட்டார். அதற்கு அந்த கிராமவாசி பணிவுடன் 'ராஜா நான் வேறு ஒன்றும் செய்யவில்லை. அந்த கழுகு குஞ்சு அமர்ந்திருந்த கிளையை வெட்டி விட்டேன் அவ்வளவு தான். அது தானாக பறக்க ஆரம்பித்துவிட்டது'என்றான். நான் பறக்க வேண்டும் என்பதும், என்னால் பறக்க முடியும் என்பதும் கழுகு குஞ்சிற்கு புரியவில்லை. ஆனால் கிளை வெட்டப்பட்ட போது தான், கழுகு குஞ்சிற்கு அந்த உண்மை புரிந்தது.

நாம் வெற்றி வாழ்க்கை வாழ வேண்டும் என்பதும், நம்மால் வெற்றியாய் வாழ முடியும் என்பதும் நமக்கு புரியவில்லை. இந்த உண்மையை புரிவதற்காகவே சவாலான சூழ்நிலைகளை கடவுள் நமக்கு கொடுத்துள்ளார். எனவே நாம் கடந்து வந்த பாதைகளை நினைவு கூர்ந்து வாழ்க்கையில் முன்னேற்ற வழியில் செல்வோம்.

Compiled by: Ms.P.E Nancy
Director Admin

பூவின் மணம் போல, மணியின் ஓசையை போல
உயிரின் ஆற்றலே அறிவாக விளங்குகீறது.
– வேதாத்திரி மகரிஷி

## FUNCTIONAL WISHES



Gandhi Jayanthi
(October 2nd)

Happy Dewali
(October 18th)




**Best Wishes from Tiaano Employees**

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!

Mr. Venkatesan.K — 11th Oct.
*Production*



Mr.Gopal Rao.G.V — 16th Oct.
*Coating*

Mrs.Eswari.k — 21st Oct.
*Coating*

**Best Wishes from Tiaano Employees**

## பொன் மொழிகள்

1. இந்த உலகில் நாம் நம் கண் முன்னால் காணும் ஒவ்வொருவரையும் நேசிக்க இயலவில்லை என்றால் கண்ணுக்குத் தென்படாத கடவுளிடம் எவ்வாறு அன்பை செலுத்த முடியும்.

2. தண்டனை கொடுப்பதற்கு தாமதம்செய்! ஆனால் மன்னிப்பு கொடுப்பதற்கு யோசனை கூட செய்யாதே!

3. இறக்கத்தான் பிறந்தோம், அது வரை இரக்கத்தோடு இருப்போம்!!!

4. உன் கண்களில் இனிமை இருந்தால் உன்னால் இவ்வுலகில் எல்லா மனிதர்களையும் நேசிக்க முடியும். உன் நாவில்(பேச்சில்) இனிமை இருந்தால் எல்லா மனிதர்களையும் உன்னை நேசிக்க வைக்க முடியும்.

5. மனம் விட்டு பேசுங்கள், அன்பு பெருகும்...

–அன்னை தெரசா

## கான்ஃபிடன்ஸ் கார்னர்

தான் அழகில்லை என்ற தாழ்வு மனப்பான்மை அந்தப் பெண்ணுக்கு, உணவகம் ஒன்றில் ஒரு தோழிக்காக காத்திருந்தார். மற்றவர்கள் பார்வையில் படுவதில் அவளுக்கு கூச்சம். நகம் கடித்து, நடுங்கிக் கொண்டு அமர்ந்திருந்தார். தூரத்து மேசையில் அமர்ந்திருந்த ஒருவர் பார்த்து கொண்டேயிருந்தார். பணிப்பெண்ணை அழைத்து ஏதோ சொன்னார். அதற்குள் அந்தப் பெண்ணின் தோழியும் வந்து சேர்ந்தார். சாப்பிட்டு முடித்ததும் பில் கேட்டார்கள். ஒருவர் பணம் கொடுத்து விட்டு ஒரு குறிப்பையும் தரச் சொன்னதாய்ப் பணிப்பெண் சொன்னார்.

அதில் “பெண்ணே! உன் கண்கள் ஒளி நிரம்பியவை. உன் புன்னகை கவர்ச்சியானது. நிமிர்ந்து இந்த உலகைப் பார். மலர்ந்து சிரி. நீ இந்த உலகை அழகாக்க பிறந்தவள்” என்றிருந்தது. அந்த துண்டுச்சீட்டு தந்த நம்பிக்கை அந்தப் பெண்ணின் வாழ்வையே மாற்றியது.

இதயம் உடைந்தவர்களுக்கு இதம் செய்வது தானே வாழ்க்கை.

–கான்ஃபிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது.

## அயலானுக்கும் அன்பு காட்டு

மதத்தின் பெயரால் நடக்கும் கலவரங்கள், சண்டைகள், போராட்டங்களை எல்லாம் பார்க்கும் போது மதம் என்ற ஒன்று தேவை தானா? என்ற எண்ணம் எழுகின்றது.

கலவரத்தையும் குழப்பத்தையும் உண்டு பண்ணப் பிறந்தது அல்ல மதம்! அமைதியைக் கொடுப்பதற்காக உருவாக்கப்பட்டது அது! மனிதர்களைப் பிரிப்பதற்காக உண்டாக்கப்படவில்லை மதம்! மனிதர்களை ஒன்றுபடுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டது தான் அது.

எந்த மதமாக இருந்தாலும் அவை “அயலானுக்கும் அன்பு காட்டு” என்று தான் போதிக்கிறது. இந்த ஒற்றை வாக்கியம் தான் கீதை, குரான், பைபிள் என்று எல்லா மதங்களின் வேதத்திலும் வெவ்வேறு வார்த்தைகளில் இருக்கிறது.

எந்த மதத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, சக மனிதர்களை நான் நேசிப்பேன்! இப்படி ஒரு சபதத்தை நாம் ஒவ்வொருவரும் ஏற்றுக் கொண்டால், மதத்தின் பெயரால் மட்டும் இல்லை. ஜாதி, இனம் என்று எந்த காரணம் கொண்டும் பிரச்சனைகள் தலை தூக்காது!

பக்குவப்பட்டவர்களுக்கு மதம் என்பது நட்பு வளர்க்கும் சாதனம். அல்லாதவர்களுக்குத் தான் அது சண்டை வளர்க்கும் ஆயுதம்.

## குழந்தைகளை சிறந்தவர்களாக வளர்ப்பது எப்படி?

நாம் சிறந்தவர்களாக நடந்து காட்டுவது ஒன்று தான் அவர்களை சிறந்தவர்களாக ஆக்கும் சிறப்பான வழி.

**BE OURSELF CORRECT!**

திருச்சிராப்பள்ளி ஸ்ரீஜயப்ப சங்கம் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது.

## தெரிந்து கொள்வோம்

### Health Benefits Of Bananas

1. Can boost brain power.
2. Relieves menstrual Cramps.
3. prevents anemia.
4. Promotes Healthy Bones.
5. Reduce depression.
6. Lowers risk of heart diseases and hypertension.
7. Regulates bowel movements.
8. Helps people with ulcer.

### பொது அறிவு களஞ்சியம்

1. ஒரு பொருளிலுள்ள மூலக்கூறுகளின் அதிவேக இயக்கமே 'வெப்பம்' அதேபோல் மூலக்கூறுகளின் அசையா நிலையே 'குளிர்'.
2. அணுவில் நேர்மின்னியும், எதிர்மின்னியும் சமமாக இருப்பதால் தான் ஷாக் அடிப்பதில்லை.
3. ஓர் ஆக்ஸிஜன் அணுவின் எடை 0.000702639 கிராம் ஆகும்.
4. மின்சார ரயிலை இயக்க மொத்தம் பதினாராயிரம் வோல்ட் மின்சாரம் தேவைப்படுகிறது.
5. திடீர் திடீரெனத் தோன்றி மறையும் விண்மீன் 'நோவா' என்றழைக்கப்படுகிறது.

### மருத்துவ குறிப்பு

**1.விஷக்கடி:**
விஷ வண்டுகள் கொட்டினால் அந்த இடத்தில் துளசி இதழ்களை கசக்கித் தேய்த்தால் விஷம் முறிந்து வலி குறையும்.

**2.பூச்சிக்கடி, உடல் அரிப்பு**
பூச்சிக்கடி ஏற்பட்டால் உடனே 3 கிராம்பை வாயில் போட்டு சுவைத்து சாப்பிட வேண்டும். அரிப்பு நிற்கும். தேனீ, குளவி கடித்து பெரியதாக வீங்கினாலும் சரியாகிவிடும். கடிப்பட்ட இடத்தில் சுண்ணாம்பை தடவ வேண்டும்.

**3.தேள்கடி:**
வெற்றிலை சாற்றை தேள் கடித்த இடத்தில் தடவி பிறகு சிறிது வெற்றிலை சாற்றை அருந்தினால் விஷம் முழுவதுமாக இறங்கிவிடும்.

*Collected From Internet.*

## சொர்க்கமும் நரகமும்

தானம் செய்வதில் இன்பம் கண்ட அந்த செல்வந்தர், மரணத்திற்குப் பிறகு சொர்க்கம் சென்றார். நரகம் எப்படி இருக்கும் என்ற விபரீத ஆசை அவருக்கு வந்தது. சொர்க்கத்தின் வாசலில் இருக்கும் நபரிடம் அவர் இதைச் சொல்ல, அவரை அன்போடு அவன் அழைத்துச் சென்று நரகத்தை காட்டினான்.

சினிமாக்களில் பார்த்ததுப் போன்ற மோசமான சித்திரவதைக் கூட இல்லை. ஆங்காங்கே வட்ட வட்டமாக சாப்பாட்டு மேசைகள். அவற்றைச் சுற்றி உட்கார்ந்திருந்தவர்கள் கையில் நீளமான கரண்டிகள். மேசையின் மையத்தில் பெரிய அண்டா. அதன் அடி ஆழத்தில் அமுத பானம் இருந்தது. அதன் சுவையே நாக்கில் உமிழ்நீர் சுரக்க வைத்தது.

ஆனாலும் அங்கிருந்தவர்கள் பஞ்சத்தில் அடிப்பட்டவர்கள் போல எலும்பும் தோலுமாய் இருந்தார்கள். அவர்கள் சாப்பிட்டே பல நாட்கள் ஆகியிருக்கும் போல் தோன்றியது. சக்தியற்றவர்களாய் கரண்டியை அந்த அண்டாவில் விடுவதும், அள்ளிய அமுதத்தை குடிக்க முடியாமல் தடுமாறுவதுமாய் இருந்தனர். கரண்டியின் கைப்பிடி நீளமாக இருந்ததால், கைகளை மடக்கினாலும் அமுதம் வாயை எட்டவில்லை. அழுகையும் எரிச்சலும் சண்டையுமாக ஒவ்வொரு மேசையிலும் முயற்சி தொடர்ந்தப்படி இருந்தது.

செல்வந்தர் இதைப் பார்த்து வேதனைப் பட, "நீ போக வேண்டிய சொர்க்கத்தைப் பார்க்கலாம், வாருங்கள்!" என்று அழைத்தான் அந்த நபர். அது பக்கத்திலேயே இருந்தது. என்ன ஆச்சரியம்... சொர்க்கத்துக்கும் நரகத்துக்கும் பெரிய வித்தியாசம் இல்லை. அதே போன்ற மேசைகள்; அண்டா; கரண்டி; அமுதபானத்தின் அற்புத நறுமணம். இங்கே மனிதர்கள் புஷ்டியாகவும் புன்னகை புரிந்த முகத்தோடும் காணப்பட்டார்கள். இங்கே அண்டாக்களின் அருகே நெரிசலான கூட்டமும் இல்லை. கூச்சலும் இல்லை.

எப்படி இது சாத்தியம்? ஒரு மேசையை உற்று கவனித்தப் போது புரிந்தது. அண்டாவின் அடி ஆழத்தில் இருக்கும் அமுதத்தை கரண்டியால் எடுக்கும் ஒருவர், அதை தனக்கு எதிரே இருப்பவருக்கு ஊட்டுகிறார். அவர் பதிலுக்கு இவருக்கு ஊட்டுகிறார். நீளமான கரண்டியால் மட்டுமே இது சாத்தியம். சுயநலம் இல்லாத அணுகுமுறை தான் இதை சொர்க்கம் ஆக்கியிருக்கிறது என்பதை உணர்ந்தார்.

**எதையும் கொடுப்பவர்களே எல்லாவற்றையும் பெறுகிறார்கள்!**

*Collected From Internet*

### WITH SELF RESPECT

Once Nehru came to vijayavada. Nehru was about to get into a car when he noticed a poor hungry boy. Nehru went to him and gave two rupees and said, "Go and eat something." But the boy Refused and said " I' m not a begger. Nehru said, "I'll buy you Something to eat. In return, can you carry my bag to the congress Office?

The boy agreed. Nehru bought the boy a plate of idlis. As the boy ate, Nehru waited. Then the boy carried Nehru's bag.

## கவிதைகள்

### அன்பு

சிலர் அன்பை வார்த்தையால்
உணர்த்தலாம்
சிலர் அன்பை உணர்வுகளால்
உணர்த்தலாம்
ஆனால்! சிலர் அன்பு புரியாது
அதை காலம் உணர்த்தும் போது தான்
கண்கள் கலங்கும்.

### நட்பு

நட்பு ஒரு புத்தகம் போன்று
அதை நிமிடங்களில் அழித்துவிடலாம்.
ஆனால் அதை எழுத ஆண்டுகள் ஆகும்.

*Collected From Internet*

## ஹைக்கூ

சோதிப்பது காலமாக இருந்தாலும்
சாதிப்பது நீயாக இருக்கட்டும்....

*Collected From Internet*

## சிந்தனைக்கு

கிராமத்தில் இருந்தாலும், நகரத்தில் இருந்தாலும், படித்த குடும்பத்தில் இருந்து வந்தாலும், படிக்காத குடும்பத்தில் இருந்து வந்தாலும் உங்களால் வெற்றி அடைய முடியும்.
நீ யாராக இருந்தாலும் உழைப்பால் அறிவால் வெற்றி அடைய முடியும்.

–Dr.A.P.J. அப்துல் கலாம்.

ஆடம்பரத்தை தவிர்த்துவிடுங்கள்
தேவையில்லாத ஆடம்பரம்
நம் சந்ததியை தெருவில் நிறுத்திவிடும்.

*Collected From Internet*

---

பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.
– Editor

When the boy reached the office he placed the bag at the entrance and left. Nehru looked the boy with bride. With tears in his eyes he said, " **Our Country have such a people with Self respect**".

## நம்பித்தான் ஆகவேண்டும்

### 5S (தொடர்ச்சி LXIV)

### அழுக்கு எது? சுத்தம் எது?

இவற்றையெல்லாம் வாங்கிக் கொடுத்து, கணினிகளைச் சுத்தப்படுத்துவது எப்படி என்று அவர்களுக்கு ஒரு வகுப்பு எடுத்தால், பையன்களுக்குக் கொஞ்சம் தைரியம் வரலாம். அதன்பிறகு, தினமும் கம்ப்யூட்டர்களைத் தைரியமாகத் தொட்டுத் தூய்மைப்படுத்தலாம்.

இப்படி ஒரு வழியாகச் சுத்தம் நிலைக்கு வருகிற நேரத்தில், ஒரு நாள் காலை திடீரென்று பெரிய கலாட்டா! ஏதோ ஒரு கம்ப்யூட்டர் தூங்கியெழ மறந்து விடுகிறது. அந்தக் கம்ப்யூட்டரைப் பயன்படுத்திக் கொண்டிருந்தவர், 'என்னோட ஆறு மாச உழைப்பு போச்சு!' என்று அலறிச் சத்தமிடுகிறார்.

'நேற்று ராத்திரி வரை எல்லாம் ஒழுங்காக இருந்தது!' என்று சத்தியம் செய்கிற அவர், அதன் பிறகு இதைச் சுத்தம் செய்த பையன் தான் ஏதோ செய்துவிட்டான் என்று எகிறிக் குதித்துக் குற்றம் சாட்டுகிறார்.

அவர் சொல்வது நிஜமா, பொய்யா என்பது வேறு விஷயம். இத்தனை கலாட்டாவையும் பார்த்துக் கொண்டிருக்கிற மற்ற தூய்மைப் பையன்கள், அதன் பிறகு கம்ப்யூட்டர்களைத் தொடுவார்களா?

( தொடரும்)

---

## TIAANO at AMAI 'Alkali Manufacturers Association of India Seminar'

